பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# Sanctity of Tiruperunturai Temple and its Architectural Splendor

**N. Saravanan,** Tamil Research Scholar, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research,Chennai,Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-3264-0586**
**Dr. S. Maheswari,** Assistant Professor of Tamil,Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research,Chennai,Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280**
**DOI: 10.5281/zenodo.20839929**

## Abstract

*The history of Avudaiyar Koil tells of events that took place there. In those events, the Divine Himself came as a Guru and gave grace to Manikkavacakar. This place is called Tirupperunturai. The name means "a great ford" – a crossing to swim across the ocean of birth and death. The temple has many names. Lord Avudaiyappan also has many names. The temple's layout shows the beauty of the deities in their sculpted forms. The Lord in the inner sanctum is aniconic and HE is without any physical shape. Because of this, offerings are made to Him through the sacred flame or light. The goddess Yogambikai gives spiritual wisdom. Her form is beautiful. Before her sits Manikkavacakar, shown in a penitential pose. The pillars of the temple are made with great skill. The fine craftsmanship is very detailed and stands out. The temple follows the Tamil Nadu architectural style. It is traditionally said that the Bhuta Ganas built it. The overall design is impressive and inspires wonder. There is also a shrine for Manikkavacakar, who built this temple. His annual festival is described. Notably, the temple has no Nandi, no pedestal, and no Navagraha planets. Nevertheless, people honour this place as the great ford that frees the soul from the waves of rebirth.*

**Keywords:** Avudaiyar, Yogambigai, Kodungai, Mandapams, Theerthams, Poojas.

## References

[1] Arunagirinathar. *Thirupparankunrath Thiruppugazh*. Vivekabhanu Achiyanthira Salai, 1914.
[2] *Avudaiyar Kovil Thala Varalaru (Thirupperunthurai)*. Thiruvavaduthurai Aadeenam, 1964.
[3] Kudavayil Balasubramaniyan. *Kalvettu Sollum Koil Kathaigal*. Suryan Pathippagam, 2017.
[4] Duraisami Iyengar, Ki., editor. *Manikkavasagar Varalaru*. K. Vijayam Company, 1919.
[5] Theivanayagam, Ko. *Thamilar Kattidakalai*. Ulaga Tamil Aaraichi Niruvanam, 2002.
[6] "Chennaitian." *Chennaitian*, https://chennaitian.blogspot.com/. Accessed 23 Mar. 2026.
[7] Srilasri Subramani Desaka Paramachariya Swamigal. "Thiruvasagam." *Manattu Malar*, 1964, p. 2.
[8] "Payana Katturai." https://travel.bhushavali.com/, 2012. Accessed 23 Mar. 2026.
[9] Muthusami, Ko. "Tiruchi Mandala Tholliyal Aivuth Thurai Pathivu." *Dinamani*, 16 Feb. 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

# திருப்பெருந்துறைத் திருத்தல மகிமையும் கோயிலின் அழகும்

**ந. சரவணன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-3264-0586
**முனைவர் செ. மகேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆவுடையார் கோயில் உருவான வரலாறு மற்றும் அங்கு நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளில் இறைவனே குருவாக வந்து அருள்புரிந்த காட்சி சொல்லப்படுகின்றது. திருப்பெருந்துறை பிறவிக்கடலை நீந்துவதற்கு என்பதால் பெரும் துறையாக பெயர் பெறுகின்றது. மேலும் தலத்தின் பெயர்களும் ஆவுடையப்பனின் பெயர்களும் பலவகையாகவே சொல்லப்படுகின்றது. கோயிலின் அமைப்பில் தெய்வங்கள் சிற்பங்களில் இருக்கும் அழகும், மூலஸ்தானத்தில் இறைவன் அருவமாக எழுந்தருளியுள்ளதால் அவருக்கான படையல் ஆவியின் மூலமே அளிக்கப்படுகின்றது என்பதும் அறியப்படுகின்றது. ஞானத்தைத் தரும் யோகாம்பிகையின் அழகும் அவளின் முன் மாணிக்கவாசகர் தவக்கோலமும் கூறப்படுகின்றது. கோயிலின் சிற்ப வேலைப்பாடுகளில் கொடுங்கையின் சிறப்பும் நுண்கலையின் அமைப்பும் சிறந்து விளங்குகின்றது. தமிழகக் கட்டிடக் கலை (திராவிட) அமைப்பில் உருவான ஆவுடையார் கோயில் பூத கணங்களால் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். இக்கோயிலின் அமைப்பு பிரமிக்கவைக்கும் அளவிற்கு சிறப்புடையது. கோயிலை எழுப்பிய மாணிக்கவாசகரின் சந்நிதி அவருக்கான உற்சவம் கூறப்படுகின்றது. இக்கோயிலில் நந்தி, பீடம், நவக்கிரகங்கள் எதுவும் இல்லை. இக்கோயில் பிறவி நீக்கும் பெருந்துறையாகப் போற்றப்படுகின்றது.*

**குறிப்புச் சொற்கள்:** ஆவுடையார், யோகாம்பிகை, மண்டபங்கள், தீர்த்தங்கள், பூசைகள்.

**முன்னுரை**

சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன் பழமையான, 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள திருப்பெருந்துறைத் திருத்தலமானது, சிவபெருமானே குருவாக வந்து அருள்புரிந்து தன் சீடனாக மணிவாசகப் பெருந்தகைக்கு தீட்சை அளித்து சிவலாயத்தைக் கட்டுவதற்கு அருள் செய்த தலம் என்ற சிறப்பை உடையது. புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயிலில் அமைந்துள்ள திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி கோயில் என்று கூறப்படும் இத்தலம் 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். திருவாசகம் தோன்றியதும், தேவாரம் பாடப்பெற்றதும் இத்தலமேயாகும். சிவபெருமானே திருவுருவம் தாங்கி குருவாக வந்தருளியதால், சிவலிங்கம் இல்லாமல் ஆவுடையார் (பீடம்) மட்டும் இத்தலத்தில் அமைந்துள்ளது. இதனால் அருவுருவாக விளங்குகிறார் என்பதை அறியலாம். இத்தகைய சிறப்புபெற்ற தலத்தின் சிறப்பையும் சிற்ப அழகையும் இக்கட்டுரையில் காணலாம்.

**தலத்தின் இருப்பிடம்**

திருப்பெருந்துறை ஒரு திவ்விய திருத்தலமாகும். இத்தலம் இன்று ஆவுடையார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இத்தலம் மயிலாடுதுறை காரைக்குடி புகைவண்டிப் பாதையில்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

அறந்தாங்கிக்குத் தென்கிழக்கில் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அக்காலத்தில் பாண்டிய நாட்டின் வடகிழக்கு எல்லையாக விளங்கிய இவ்வூர் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தின் தென் எல்லையில் இருக்கிறது. வெள்ளாற்றங்கரையில் தோப்பும் சோலையும், சாலையும் சூழ்ந்த மணற்பாங்கான இடமாக இவ்விடம் இருக்கிறது. வயல்கள் சூழ்ந்த இவ்வூரை மருதமொடு தழுவித் திகழும் முல்லை நிலம் என்று கூறப்படுகிறது.

**திருப்பெருந்துறை பெயர்க்காரணம்**

உலக உயிர்கள் வீடுபேறு பெறுவதற்குச் சாதனமாகப் பிறவிக் கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாக - பெரும் துறையாக விளங்கும் தலம் ஆதலின் பெருந்துறை எனப் பெயர் பெற்றது.

**தலத்தின் வேறு பெயர்கள்**

கோயில் கணக்குகளில் ஆளுடையார் கோயில் என்று கூறப்படுகிறது. திருமுறைகளிலும், வடமொழி இலக்கியங்களிலும் அநாதி மூர்த்தித்தலம், தட்சிண கைலாயபுரம், தென்கயிலை, தேசுவனம், பராசத்திபுரம், பூலோக கைலாயம், யோகபீடபுரம், யோகவனம் முதலான பல பெயர்களால் குறிக்கப் பெறுகின்றது. திருவாசகம் – சிவபுரம் என்று குறிக்கின்றது. கல்வெட்டுகளில் மிழிலைக் கூற்றத்து நடுவிற் கூற்றம், பிரம்ம தேசம், தனியூர்த் திருபெருந்துறையான பவித்திரமாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப் பெற்றுள்ளது. இத்தலம் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமானது. இதனையே பதினெட்டு பெயர்களாக வழங்குவர். அவைகளாவன - 1.திருப்பெருந்துறை, 2.குருந்தவனம், 3.சதுர்வேதபுரம், 4.சிவபுரம், 5.ஞானபுரம், 6.திரிமூர்த்திபுரம், 7.தென்கயிலை, 8.தேசுவனம், 9.பராசத்திபுரம், 10.பவித்திரமாணிக்கம், 11.யோகபீடம், 12.ஆளுடையார் கோயில், 13.உபதேசத்தலம், 14.அனாதிமூர்த்தத்தலம், 15.ஆதிகயிலாயம், 16.சதுர்வேத மங்கலம், 17.தட்சிணகயிலாயம், 18.யோகவனம் என்பனவாம்.

**மூலவரான ஆத்மநாதரின் வேறுபெயர்கள்**

1.ஆத்மநாதர், 2.பரமசுவாமி, 3.திருமூர்த்திதேசிகர், 4.சதுர்வேதபுரீசர், 5.சிவயோகவனத்தீசர், 6.குந்தகவனேசர், 7.சிவக்ஷேத்ரநாதர், 8.சன்னவனேசர், 9.சன்னவநாதர், 10.மாயபுரநாயகர், 11.விப்பிரதேசிகர், 12.சப்தநாதர், 13.பிரகத்தீசர், 14.திருதசதேசிகர், 15.அசுவநாதர், 16.சிவபுரநாயகர், 17.மகாதேவர், 18.திரிலோககுரு என்பன. ஷடாராதனர் என்ற பெயருமுண்டு.

**தல வரலாறு**

அரிமர்த்தன பாண்டியனிடம் முதலமைச்சராக இருந்த வாதவூரர் கீழ்கடற்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றபோது அவரைக் குருந்த மரத்தின் கீழிருந்து குருவடிவில் இறைவன் ஆட்கொண்டு, அவரை மாணிக்கவாசகராக மாற்றித் திருவாசகம் அருளிய தலம் திருப்பெருந்துறையாகும். இத்திருக்கோயில், இறைவனின் கட்டளைப்படி மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது. ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும் என்று சொல்லச் செய்த பெருமான் அவ்வாறே நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு சென்றார். அவ்வாறு செய்த இடம் நரிக்குடி என்று இன்று வழங்கப்படுகின்றது.

**இறைவனே கிழவேடம் தரித்துவந்த நிகழ்வு**

கிழவேடம் தரித்து இறைவனே, இத்தலத்தை சுற்றியுள்ள அந்தணர்களின் குழந்தைகளுக்கு வேதம் கற்பிக்க வந்ததாக சொல்லப்படுகிறது. அவற்றில் பெருந்துறையில் வாழந்து வரும் முந்நூறு அந்தணர் வீட்டுக் குழந்தைகட்கும் வேதசாத்திரங்களைக் கற்றுத்தர இறைவனே முன்வந்தார். அந்தணர்களும் அதுகேட்டு மகிழ்ந்து விநாயகரைப் பிரதிஷ்டை

செய்து பாடசாலையொன்றை ஏற்படுத்தித் தந்தனர். அந்தணர்களின் வீடுகளில் நாடொறும் புழுங்கலரிசி பாகற்காய் முளைக்கீரை சமைத்து அப்பெரியவருக்கு உணவாகத் தந்து வந்தனர். அவரும் அவ்வுணவை உண்டு பிள்ளைகளுக்கு வேதங்களைக் கற்பித்து வந்தார். ஞானயோக சாஸ்திரங்கள், வியாகரணம், தர்க்கம் முதலியவை அனைத்தையும் முறையாகக் கற்பித்தார். குழந்தைகளோடு குழந்தையாய்க் கலந்து ஓடியாடியும், கண்ணைப் பொத்தி விளையாடியும் மகிழ்வித்தார். ஒருநாள் குழந்தைகளோடு விளையாடிய கிழவர் திடீரென மறைந்தார். குழந்தைகள் அவரைக் காணாது வருந்தி தம் பெற்றோரிடம் கூறி அழுதனர். அவர்களும் மனம் வருந்தி எல்லாவிடங்களிலும் தேடினர்; பயனில்லை. அன்றிரவு குழந்தைகள் அனைவருடைய கனவிலும் ஒரே சமயத்தில் இறைவன் தோன்றி, "கிழவராக வந்து உங்களுக்கு வேதசாத்திரங்களைக் கற்பித்தது நானே. உங்கள் பெற்றோரிடம் சொல்லி இதுவரையில் நான் சுடச்சுட விரும்பியுண்டு வந்த புழுங்கல் அரிசி, முளைக்கீரை, பாகற்காய் ஆகிய இவற்றையே எனக்குச் சமைத்துச் சூட்டோடு நிவேதித்து வரச்செய்யுங்கள்" என்றருளிமறைந்தார். மேலும் சிவபுரம் என்ற இத்திருத்தலத்தில் துண்டகன் என்னும் பேராசை கொண்டவனிடம் அந்தணர்களின் நிலம் அபகரிக்கப்பட்டது. அவனிடமிருந்து மீட்டுத்தர ஆத்மநாதரிடம் அந்தணர்கள் முறையிட்டனர். அதற்கு இசைந்த இறைவன் ஒரு பெரியவர் வேடம் தரித்து பாண்டிய மன்ன னிடம் முறையிட்டு துண்டகனிடமிருந்து நிலங்களை மீட்டுத் தந்தார். மேலும், மீட்டுத் தந்தால் 300 ல் ஒரு பங்கு தனக்கு என்றும் கேட்டார். அதன்படி அவருக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் உலக மக்கள் உய்யும் பொருட்டு மணிவாசப் பெருமானால் ஆலயம் எழுப்பப் பட்டது என்று வரலாறு கூறுகின்றது. இத்தலம் குருந்தவனம் – வனம், தீர்த்தத் தலம் – தலம், சிவபுரம் – புரம், பொய்கை – தீர்த்தம், மூர்த்தி – ஆத்மநாதர், தொண்டர் – மாணிக்கவாசகர் போன்ற அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புடையது.

**கோயில் அமைப்பு**

சிவாலயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் திருப்பெருந்துறைத் திருத்தலமான ஆவுடையார் கோயில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. கோயில் கல்வெட்டுக்களில் இத்தலம், “மிழலைக்கூற்றத்து நடுவிற்கூற்றம் பிரமதேசம் தனியூர்திருப்பெருந்துறையான பவுத்திர மாணிக்கச் சதுர்வேத மங்கலம்" என்றுக் குறிக்கப்பட்டுள்ளது. ஆவுடையார் கோயிலின் மண்டபங்களில் கல்வெட்டுக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் குத்தகைதாரர் விபரம், கும்பாபிஷேகம் நடைபெறும் விபரங்கள், இதுவரை நடந்த நிகழ்வுகள், நிர்வாகம் பற்றிய செய்திகள் என அனைத்தும் பத்திரங்கள் போலவே பொறிக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்த இடம் ஆதிகயிலாயநாதர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயில் ஆவுடையார் கோயிலுக்கு எதிரில் அமைந்துள்ளது. இக்கோயில் மாணிக்கவாசகர் இவ்விடம் வருவதற்கு முன்பே அமைக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது. ஆதிகயிலாயநாதர் கோயில் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிவகாமி அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. பராசரர், புலஸ்தியர், அகத்தியர், முதலிய மகரிஷிகள் போன்றோர் இங்கிருந்ததாகக் கூறுகின்றனர்.

ஆவுடையார் கோயில் சிற்பங்கள் அனைத்தும் பார்க்கும்போது, கண்கள் அவ்விடத்திலிருந்து விலகாமல் வியப்பின் விளிம்பில் இருக்கும் அந்த அளவிற்கு மிக நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. வல்லப கணபதி, உக்கிர நரசிம்மர், பத்திரகாளி, ஊர்த்துவ தாண்டவர், பிட்சாடனர், வில் ஏந்திய முருகன், ரிஷபாந்திகர், அரியர்த்த மூர்த்தி (சங்கர நாராயணர்), வீரபத்திரர்கள், மாணிக்க வாசகர் அமைச்சர் கோலம், துறவுக் கோலம்,

அசுவநாதர்(குதிரைச்சாமி), குறவன், குறத்தி, விநாயகர், உடும்பும், குரங்கும் கற்சங்கிலிகள் இரண்டே தூணில் ஓராயிரம் கால்கள் 1008 சிவாலயங்களில் உள்ள இறைவன் இறைவி திருவுருவங்கள் பல நாட்டுக் குதிரைச் சிற்பங்கள் 27 நட்சத்திர உருவச் சிற்பங்கள், நடனக்கலை முத்திரை பேதங்கள் போன்ற அனைத்தும் கண்ணைக்கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. சப்தஸ்வரக் கல்தூண்கள் கூடல்வாய் நிழல் விழும் பகுதி பசுமாட்டின் கழுத்து போல் இருப்பது இக்கோயிலின் சிறப்பை மெருகூட்டுகிறது. இங்கு சிற்பங்களிலே விநாயகர் காட்சி தருகிறார். இக்கோயிலில் "உளி வேலைப்பாடுகள் கொண்ட சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. துண்டி விநாயகர், கல் சங்கிலிகள், ஆயிரம் கால்கள் கொண்ட இரண்டு தூண்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் நந்தி, த்வஜ்ஸ்தம்பம், நவக்கிரக சிலைகள் இல்லை. அதற்கு பதிலாக நவக்கிரகங்கள் தூண்களாகக் காணப்படுகின்றன. (chennaitian.blogspot.com) இவையனைத்தும் உலகப்புகழ் பெற்றவையாகவேத் திகழ்கின்றது.

"சிவலிங்கம் மூன்று பகுதியானது. மேலே குழவி போன்ற ஒரு பகுதி. அதன் அடியிலே சதுரமான ஒரு பீடம். அதற்கும் அடியிலே ஒரு பீடம். மேலுள்ள பகுதிக்குப் பாணம் என்று பெயர்.நடுவிலுள்ள பீடத்திற்குச் சக்திபீடம் என்று பெயர். அடியிலுள்ள பகுதிக்குப் பிரமபீடம் என்று பெயர். இம்மூன்றும் கூடிய சிவலிங்கத்தையே மற்ற கோயில்களில் காண்கிறோம்.இங்கே சக்திபீடம் மட்டுமே இருக்கின்றது. அதற்கு மேலே குவளை சாந்தி அலங்காரம் செய்யப்படுகின்றது" – ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி தேசக பரமாச்சாரிய சுவாமிகள், திருவாசக மாநாட்டு மலர் 1964 ப. 2 இறைவன் திருப்பெருந்துறையில் அருவ நிலையான ஆத்ம சொரூப நிலையில் எழுந்தருளியுள்ள சிறப்பை,

**"பார்த்து நாம் குருவாய் வந்தனுக்கிரகம்**
**பதனமாய் வைத்து மனத்துள்ளே – நிதம்**
**பத்திசெய் வேறொன்றுமில்லை யில்லை – இது**
**பரம ரகசியம் என்று கொள்ளே" – மாணிக்கவாசகர் விலாசம்**

ஆவுடையார்க்குப் பின்புறச் சுவரில் 27 நட்சத்திரத் தீபங்களும் அதற்கு மேல் சூரிய சந்திர அக்கினி என்ற மூன்று தீபங்களும் சுடர்விடுகின்றன. சுவாமி திருமுன்பு அமுத மண்டபத்தில் உள்ள படைக்கல்லில் புழுங்கல் அரிசி அன்னத்தை ஆவி புலப்பட பரப்பி அதைச் சூழத் தேன்குழல், அதிரசம், அப்பம், வடை முதலானவற்றை வைத்து நிவேதனம் செய்து சாதத்தில் வருகின்ற ஆவிக்கு தீபாராதனை செய்யப்படுகின்றது. பாகற்காயும் நிவேதனம் செய்யப்படுவது இக்கோயிலன் இன்னொரு புதுமையாகவே இருக்கின்றது.

**யோகாம்பிகை சந்நிதி**

ஆத்மநாத சுவாமியின் கருவறைக்கு வடமேற்கில் முதல் பிரகாரத்தில் யோகாம்பிகை கோயில் உள்ளது. இக் கோயிலின் உள்ளே யோகபீடமும் அதன்மேல் அம்பிகையின் பாதங்களும் உள்ளன. அம்பிகை அரூபமாக இருப்பதால் அம்பிகைக்கு திருவுருவம் இல்லை. கோயிலின் தெற்குப்புறத்தில் உள்ள கருங்கல் பலகணி வழியாக தெரிசனம் செய்யவேண்டும். அவ்விடத்தில் மேருப்பிரஸ்தாரமான ஸ்ரீவித்யா சக்கரம் உள்ளது. இவைதான் அம்மை எழுந்தருளியிருக்கின்ற தோற்றம். யோகாம்பிகை ஞானத்தைத் தருபவள் ஆவுடையார் கோவிலில் மாணிக்கவாசகர் ஞானம் பெறும் பொருட்டு அம்பிகை யோகாம்பிகையாக வீற்றிருக்கிறாள். அதனால் உலகிலுள்ளோர் உய்யும் பொருட்டு ஞானோபதேசம் செய்வதற்கு இறைவன் வந்தார். அவரின் சரிபாதியாகிய அம்மையும் அருவநிலையில் பாதம் மட்டுமே திகழும்படி யோகாம்பிகை என்னும் பெயரில் வீற்றிருக்கிறாள்.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**யோகாம்பிகை**

திருவாரூர் தியாகராஜர் சன்னதியில், தியாகராஜப் பெருமானுக்கு இடதுபுறம் மிகச்சிறிய உருவமாக, ரகசியமான முறையில் யோகாம்பிகை என்னும் பெயரில் வீற்றிருக்கிறாள் அம்பிகை. அன்னை யோகாம்பிகை அமைதி, ஞானம் மற்றும் யோக சக்தியின் வடிவம் அர்த்தநாரீஸ்வர சொரூபம் என்பதை, "....தியாகராஜ வாமபாக ஸ்த்திதாம் சுபகரீம் யோக மார்க்க பிரதாயினீம் ஞான ரூபிணீம் யோகாம்பிகாம் பஜே அஹம் ஸர்வ மங்களாம்..." – ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர், ஸ்ரீ யோகாம்பிகை அஷ்டகம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு ஸ்லோகம் தியாகராஜ பெருமானின் இடது பாகத்தில் (வாம பாகம்) வீற்றிருப்பவளே. என்று குறிப்பிடுவதால் அன்னையின் யோகநிலை புலப்படுகின்றது. அதுபோலவே மாணிக்கவாசர் ஞானம் பெறும்பொருட்டு சிவபெருமானும் யோகாம்பிகையும் அருள்பாலித்தமையால் அன்னை யோயாம்பிகையாக எழுந்தருளியுள்ளாள் என்பது விளங்குகின்றது. இக்கோயிலை வலம் வரப் பிரகார அமைப்பு இருக்கிறது. திருப்பரங்குன்றத் திருப்புகழில் 'அருக்கு மங்கையர் மலரடி வருடிய' என்று தொடங்கும் பாடலில்,

> **"செருக்கும் அம்மபல மிசைதனில் அசைவுற**
> **நடித்த சங்கரர் வழிவழி அடியவர்**
> **திருக்கு ருந்தடி அருள்பெற அருளிய ..... குருநாதர்" (திருப்பரங்குன்றத் திருப்புகழ் பா. 7)**

என்று ஆத்மநாதசுவாமி போற்றப்படுகிறார்.

**சிற்ப வேலைப்பாடுகள்**

பழங்காலத்தில் கோயிலின் அமைப்பு அதன் மேற்கூரை எல்லாம் எவ்வகையில் அமையவேண்டும் என்ற நெறிமுறைகள் வகுத்திருப்பர். அதன்படி,

> **ஒப்பனை முறையும் காணப்படும். இவ்வமைப்பின் மீது பிரஸ்தரம் எனப்படும் கூரை அமையும். இவ்வமைப்பு பூதவரி, கொடுங்கை, யாளவரி என்ற பகுதிகளையும் அதன்மேல் தளங்களையும் பெறுவதுண்டு. (தமிழர் கட்டிடக்கலை, ப. 10)**

என்று கூறப்படுகிறது. ஆவுடையார் கோவிலின் அமைப்பு கொடுங்கை என்பதை இதன் மூலம் அறியலாம். பண்டைநாளில் ஸ்பதிகள் கோயில் கட்டுவதற்கு உடன்படிக்கை எழுதுங்கால் ஆவுடையார்கோயில் கொடுங்கைகளைப்போலத் தங்களால் அமைக்க முடியாது என்பதைக் குறிக்கும் வகையில் "ஆவுடையார்கோயில் கொடுங்கைகள் நீங்கலாக" என்று எழுதும் வழக்கம் இருந்ததாம். அந்த அளவிற்கு கொடுங்கைகள் சிற்பம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. அத்தகைய கடினமான கொடுங்கைகளையே இக்கோயிலில் அமைத்துள்ளனர் என்றால் இது மிகச்சிறப்பு வாய்ந்த தலம் என்பதில் ஐயமில்லை. நாங்கள் வலதுபுறம் மேலே நுழைந்தவுடன் இந்த கொடுங்கைகள் - டைல்ஸ்டு டெரகோட்டா கூரை உருவகப்படுத்துதல் இருந்தது. பலகைகள், கொட்டைகள், போல்ட்கள், மரக் கட்டைகள், எல்லாம் பாறையால் செதுக்கப்பட்டுள்ளன! உண்மையில் ஒரு பகுதியில் ஒரு பல்லி மற்றும் ஒரு குரங்கு ஓடுவது மிகவும் யதார்த்தமாக சித்தரிக்கப்பட்டுள்ளது! அந்த விலங்குகள் உண்மையில் எப்படி இருக்கும், விளையாட்டுத்தனமாகவும் கிராமப்புறங்களில் உள்ள வீடுகளின் கூரைகளில் ஓடிக்கொண்டிருக்கும்!!! நாங்கள் உள்ளே நுழைந்தவுடன், வலது மற்றும் இடதுபுறத்தில் 2 தூண்கள் உள்ளன, அவை ஒன்றாக 1000 மினி தூண்களை உருவாக்குகின்றன, இது ஆயிரம் கால் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இந்தத் தூண்களுக்கு அடுத்ததாக ஈட்டி மற்றும் 8 கைகளுடன் அகோர வீரபத்திரர் மற்றும் கத்தி மற்றும் இடது மற்றும் வலதுபுறத்தில் 10 கைகளுடன் ரண வீரபத்திரர் உள்ளனர். இவர்களைத் தவிர சுமார் 10 அடி உயரமுள்ள குதிரைகளில் 7 பெரிய வீரர்கள் உள்ளனர், ஒவ்வொன்றும் வெவ்வேறு முறையில்

வடிவமைக்கப்பட்டுள்ளன. 1 தமிழ் பாணியில், 1 கிரேக்க மொழியில், 1 மலையாளியில், 1 மராத்தியில். இந்த போராளிகள் ஒவ்வொருவரும் தனித்துவமான உடைகளையும் அணிந்துள்ளனர், அதைப் பற்றி நான் ஒரு தனி இடுகையை எழுதுவேன். இந்த சிற்பங்கள் ஒவ்வொன்றும் ஒரு முழு பாறையால் ஆனது!!! வியக்க வைக்கிறது. (பயணக்கட்டுரை travel.bhushavali.com 2012)

**ஆவுடையார் கோயிலின் கட்டிடக்கலை**

"இந்திய நாட்டுக் கட்டிடக் கலையை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பதாகும். ஆவுடையார் கோயில் அமைப்பு *தமிழகக் கட்டிடக் கலை* பாணியைச் சார்ந்தது. இருப்பினும் இதன் அமைப்பு மற்ற சிவன் கோயில்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. இவற்றில் நாகரம் என்பது வட இந்திய கட்டிடக் கலை, இது நருமதை ஆற்றுக்கு வடக்கே அமைக்கப்பட்டவை. இது தமிழ் நாட்டில் இடம்பெறவில்லை. இரண்டாவதாக வேசரம் என்னும் பெயருள்ள கட்டிடவகை. இது பௌத்த மதத்தாரால் வளர்ச்சி அடைந்த தாகத் தோன்றுகிறது. இந்த கட்டிட அமைப்பு வட்டவடிவமாக அல்லது நீண்ட அரைவட்ட வடிமாக இருக்கும். இது தமிழ் நாட்டின் சில கோயில்களில் அமைக்கப்பட்டுள்ளது. *தமிழகக்* கட்டிடக்கலை அமைப்பு மூவேந்தர் காலத்திய அனைத்து கோயில்களிலுமே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள தூண்கள் கூடுகளை வைத்து இக்கட்டிடக் கலையை நாம் அறிந்துகொள்ள இயலும்." (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 15) ஆவுடையார் கோயில் தமிழகக் (திராவிட) கட்டிடக் கலை அமைப்பைக் கொண்டது என்பதை அதன் சிற்ப வேலைப்பாடுகள் மூலம் அறிய முடிகிறது. "திராவிடம் வடபால் கிருஷ்ணா நதிக்குத் தெற்கே கள்ளியாகுமரிவரை அமைந்த கட்டிடக்கலையுள் அடங்குகின்றது என்று கூறப்படுகின்றது.

ஆவுடையார் கோயிலின் கல் கொடுங்கைகள் மரத்தால் செய்யப்பட்டது போன்ற மிக மெல்லிய வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. இது உலகப்புகழ் பெற்றதாகத் திகழ்கின்றது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் கல் சங்கிலிகள் ஒரே கல்லால் செதுக்கப்பட்டவை. மற்ற கோயில்களைப் போல இங்கு நந்தியோ பலிபீடமோ கருவறைக்கு எதிரே இருப்பதில்லை. இங்குள்ள கல் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிலைகளில் நகம், நரம்பு மண்டலம் மற்றும் ஆடையில் உள்ள நூலிழைகள் வரை மிகத் துல்லியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. கூரைப்பகுதியில் கல்லை வளைத்து மரவேலைப்பாடு போல செய்திருப்பதில் ஒரு சிறு காகிதத்தைக் கூட நுழையவிடாமல் செய்து விடும் அளவிற்கு மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது.

**மண்டபத்தின் மேற்புறம்**

முன் மண்டபத்தின் மேற்புறக் கொடுங்கையின் மேலே ஒரு குரங்கும் (கீழ் நோக்கியவாறு), ஒரு உடும்பும் (மேல் நோக்கியவாறு) செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது அலைபாயும் குரங்கு மனத்தை அடக்கி, ஆத்மநாதரின் திருவடியில் உடும்புப் பிடிபோல நிறுத்தி - அவருடைய திருவடிகளைச் சிக்கென பிடித்து, உய்வுபெற வேண்டுமென்னும் எண்ணத்துடன் உள்ளே செல்க என்று உணர்த்துவதாக உள்ளது.

**ரகுநாத பூபால மண்டபம்**

அற்புதமான வேலைபாடுடைய பெரிய மூர்த்தங்களைக் கொண்டது. இம்மண்டபம் பாலவனம் ஜமீன்தாரர்களின் முன்னோர்களான வேதவனப் பண்டாரம், ஆறுமுகப் பண்டாரம் ஆகியோர்களால் 330 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாம். ரகுநாத பூபால மண்டபத்தின் இடதுபுறத்தின் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி உள்ளது.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

**தியாகராஜ மண்டபம்**

அக்கினி தீர்த்தத்திற்கு வடக்கே பிரகாரத்தின் வடகோடியில் தியாகராஜ மண்டபம் இருக்கிறது. இதற்கு அச்சுதப்ப பூபால மண்டபம் என்ற பெயரும் உண்டு. இம்மண்டபத்து இரண்டு பெரிய தூண்களில் குதிரை வீரர் சிற்பங்கள் இரண்டு உள்ளன. மண்டபத்தின் நடுவில், உள்மதிலை ஒட்டினாற்போல் மேற்கு முகமாக முத்து விநாயகர் சந்நிதி உள்ளது. இம்மண்டபத்தின் மேல் தளத்தில் கருங்கல் சங்கிலி தொங்குகிறது. இந்த மண்டபத்தின் வடக்குப் பகுதியில் ஊஞ்சல் மண்டபம் ஒன்று இருக்கிறது. இவ்விரு மண்டபங்களும் ஒன்றுபோல் இணைக்கப்பட்டு மேல் தளத்தால் மூடப்பட்டிருக்கிறது. மேல் தளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள கொடுங்கைகள், அதி அற்புதமான வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. வடகிழக்குப் பகுதியிலுள்ள கொடுங்கையில் சில துளைகளைக் காணலாம். இத்துளைகள், கொடுங்கையின் கனம் எவ்வளவு என்பதை அறியத்துணையாகின்றன. கொடுங்கையின் கனம் சுமார் ஓரங்குலம்.

> **கொடுங்கையின் ஒரு மூலையின் இணைப்பு வேலை சாத்து எனப்படும். கைமரங்களின் வளைவு சித்திர வேலைப்பாடுகளோடு பிணைந்து நிற்கின்றன. அவற்றின் இடையே முட்டு முட்டாக குமிழ் ஆணிகள் தெரிகின்றன. மேல்பலகை கருங்கற் பலகை அது காலங்குள கனமுள்ளது. (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 17)**

பார்க்க எளிமையாகக் காணப்பட்டாலும் சிற்பியின் கைவண்ணம் மிகச் சிறப்பு வாய்ந்த தாகவும் வியப்பிற்குரியதாகவும காணப்படுகின்றது. கொடுங்கைகள் சிற்பமானது, கல்லைத் தேக்கு மரச்சட்டம் போல் இழைத்து அதில் கம்பிகளை இணைக்கும் ஆணிகள் ஆணிப்பட்டைகள் எல்லாமே கல்லிலேயே செதுக்கப்பட்டு அதன்மீது மெல்லிய ஓடு வேய்ந்திருப்பது போல செய்திருப்பது வியப்பிற்குரியதாக இருக்கிறது. ஒரு கல்லுக்கும் மறு கல்லுக்கும் இடையில் எந்த இடத்தில் இணை சேர்க்கப்பட்டது என்பதை அறியா வண்ணம் மிக நேர்த்தியாக சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய த த் ரூபமான சிற்ப வேலைப்பாடுகளும் கோயிலின் அமைப்பும் சாதாரண மனிதனால் செய்யமுடியுமா என்ற அச்சம் எழுகிறது. பூத கணங்கள் கட்டியிருப்பதாக நம்பப்படுகிறது.

**ஊஞ்சல் மண்டபம்**

தியாகராஜ மண்டபத்திற்குள்ளே வடக்குப்புறத்தில் ஊஞ்சல் மண்டபம் அமைந்திருக்கிறது. உயரமான மேடைமேல் இம்மண்டபம் உள்ளது. ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் நடைபெறும் திருவிழாக்களில் மூன்றாம் நாள் விழாவில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தியாக கொண்டாடப்படகிறார். இக்கோயிலைத் தவிர மாணிக்கவாசகர் கோயில் கொண்ட இடம் இங்கே எழுந்தருளிக்காட்சி வழங்குவது வழக்கம்.

- **திருஉத்தரகோசமங்கை: மாணிக்கவாசகர் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்படும் பழமையான சிவத்தலம்.**
- **மதுரை: நரிகளைப் பரிகளாக்கியது மற்றும் வைகை ஆற்றில் வெள்ளம் வரச் செய்த லீலைகள் மதுரையில் நடந்தவை.**
- **சின்னமனூர் (தேனி): இங்கும் மாணிக்கவாசகருக்கென ஒரு தனி ஆலயம் உள்ளது.**

மாணிக்கவாசகர் தனது இறுதிக் காலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தார். இங்கேதான் அவர் தனது தெய்வீகப் பாடல்களான திருவாசகம் மற்றும் திருக்கோவையார் ஆகியவற்றைப் பாடி முடித்தார். இறைவன் ஒரு முதியவர் வடிவில் வந்து அவற்றை மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல ஏட்டில் எழுதினார் என்பது வரலாறு. முடிவில் "திருச்சிற்றம்பலமுடையார்" என்று

கையொப்பமிட்டு கோயிலின் படிக்கட்டில் அந்த ஏடுகளை வைத்து மறைந்தார். மாணிக்கவாசகர் அங்கேயே ஜோதியாக இறைவனுடன் கலந்தார்.

சிற்பக்கலைக்குச் சான்றாக விளங்கும் புகழ்பெற்ற மண்டபங்கள்:

- **தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோவில் மண்டபம்: இது ஒரு தேரின் வடிவில் (யானைகளும் குதிரைகளும் இழுப்பது போல) அமைக்கப்பட்டிருக்கும்.**
- **மதுரை ஆயிரங்கால் மண்டபம்: இங்குள்ள 985 தூண்களும் வெவ்வேறு விதமான சிற்பங்களைக் கொண்டிருக்கும். எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் தூண்கள் நேர்க்கோட்டில் தெரியும் வண்ணம் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.**
- **புதுக்கோட்டை ஆவுடையார்கோவில் மண்டபம்: இங்குள்ள கொடுங்கைகள் மற்றும் தூண் சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவை. என்று பழங்காலத்தில் ஆலயங்களில் எழுப்ப ப்பட்ட மண்டபங்களின் சிறப்பு கூறப்படுகின்றது.**

**ஆவுடையார் கோயில் மண்டபங்கள்**

**வசந்த மண்டபம்:** மூன்றாம் பிரகாரத்தில் கிழக்குப் பகுதியில் வெளிமதிலை ஒட்டித் திருமாளிகைப் பத்தி மண்டபம் உள்ளது. மடப்பள்ளிக்குத் தெற்கே திருமாளிகைப் பத்தியில் வசந்த மண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தின் நடுவில் ஒருமேடையும் அதனைச் சுற்றி நீராழியும் உள்ளன. இந்த மேடைக்கு வடக்கே வசந்த விநாயகர் எழுந்தருளி உள்ளார். ஆனி, மார்கழி மாத விழாக்களில் ஐந்தாந் திருநாள் விழாவன்று மாணிக்க வாசகர் இம்மண்டபத்தில் எழுந்தருளிக் காட்சி வழங்குவது வழக்கம். இதற்குத் தெற்கே திருமாளிகைப் பத்தியில் நெற்களஞ்சிய அறைகளும் அரிசிக் களஞ்சிய அறைகளும் உள்ளன.

**பஞ்சாட்சர மண்டபம்:** மூன்றாம் பிரகாரத்தில் இரண்டாம் கோபுரவாயிலை ஒட்டினாற் போல் பஞ்சாட்சர மண்டபம் இருக்கிறது. இதற்குக் 'கனகசபை' என்ற பெயருமுண்டு. இம்மண்டபம் நடுவில் சதுர அமைப்பும் நான்கு புறமும் தாழ்வார அமைப்பும் கொண்டிருக்கிறது. இம்மண்டபத்தில் “உதிக்கும் சகாத்தமிங் கொன்றரை யாயிரம்” எனத் தொடங்கும் ஒரு கல்வெட்டுச் செய்யுள், இந்தக் கோவில் மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது என்பதையும், இந்த ஆலயத்தில்தான் அவர் திருவாசகத்தை இயற்றினார் என்பதையும் நிறுவுகிறது. மேலும் இந்தக் கோவிலில் உன்ன கனகசபை மண்டபத்தில் திருவாசக செய்யுள்கள் பொறிக்கப்பட்டுள்ளன” - திருச்சி மண்டல தொல்லியல் ஆய்வுத் துறை பதிவு அலுவலர் கோ.முத்துசாமி, தினமணி செய்திகள் 16 பிப்ரவரி 2014 என்பதையும் ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர்.

நடுப்பகுதியிலுள்ள தூண்களில் குதிரைச் சாமி என்ற அசுவநாத சிற்பமும், பாண்டிய மன்னன் சிற்பமும், மாணிக்கவாசகரின் அமைச்சர் கோலச் சிற்பமும், குறும்பர்கோன் சிற்பமும் உள்ளன. புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்துவாக்களும் கட்டங்களாக இம்மண்படத்தின் மேல் தளத்தில் - மந்திரம், பதம், வன்னம், அமைத்துக் காட்டப்பெற்றுள்ளன. மேல் தளத்தை ஒட்டியமைந்த ஒரு சரத்தில் முந்நூற்றொருவர் சிற்பமும், நம்பிமார் ஒருவர் சிற்பமும் உள்ளன.

**தில்லை மண்டபம்:** இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதியில் முதல் கோபுர வாயிலை ஒட்டினாற்போல் தில்லை மண்டபம் இருக்கிறது. இதற்கு நடன சபை என்ற பெயரும் உண்டு. மண்டபத்தின் இரண்டு தூண்களில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் சிற்பங்கள் உள்ளன. மற்றும் இம்மண்டபத்தின் நான்கு தூண்களில் குறவன் குறத்தி சிற்பங்கள் உள்ளன. இவை உலகப் புகழ்பெற்ற அதி அற்புதமான சிற்பங்களாகும்.

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**சுந்தரபாண்டியன் மண்டபம்:** ஆத்மநாதர் மூலக்கோயிலுக்கு எதிரே சுந்தரபாண்டியன் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தெற்குப் புறத்தில் உள்ளது பிரதான வாயில். இவ்வாயில் வழியாக உள்ளே நுழைவது வழக்கத்தில் இல்லை. உற்சவ மாணிக்கவாசகரை வணங்கிய பிறகு இம்மண்டபத்தின் மேற்குக் கர்ணத்துவார வழியாகச் சென்று ஆத்மநாதரை வழிபடுவது வழக்கமாக உள்ளது. வலமாக வரும்போது சுவரில் காணப்படும் வண்ண ஓவியங்கள் மிகப் பழமையானவை என்பதால் அவைகள் அழிந்த நிலையில் உள்ளன.

**ராஜகோபுரம்:** முன்பு ஐந்து நிலைகளாக இருந்ததை மாற்றி ஏழுநிலைகளாக்கித் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. நெடிதுயர்ந்த ராஜகோபுரமாகக் காணப்படுகின்றது. ராஜகோபுர வாயிலின் இடப்பக்கதில் - சுவரில் - வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலுக்கு வைத்துள்ள தர்மத்தைப் பற்றிய சாசனக் கல்வெட்டு, பதிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்திராத்வா முதலிய ஆறு ஆத்வாக்களைக் குறிக்கும் வகையில் ஆறு வாயில்கள் உள்ளன.

**ஆறு சபைகள்:** ஆறு சபைகளாவன 1) கனகசபை 2) நடனசபை, 3) தேவசபை, 4) சத்சபை, 5) சித்சபை, 6) ஆனந்த சபை என்றழைக்கப்படுகின்றன.கனகசபை - 81 தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நர்த்தனசபை (நடன/நிருத்தசபை) - பதஞ்சலி வியாக்ரபாதர்கள் பெருமானிடம் கருணையை வேண்டிப் பெற்ற இடம் 224 புவன தீபங்களையுடையது.

**தேவசபை:** சூரனிடம் பயந்த தேவர்கள் தவஞ்செய்த இடமாகச் சொல்லப்படுவது; இதை சுந்தரபாண்டிய மண்டபம் என்பர். இங்கு ஏகாதச மந்திரங்கள் 11 தீபங்களாக உள்ளன.
சத்சபையில் 36 எண்ணுடைய தத்துவத் தீபங்கள் பிரகாசிக்கின்றன. சித்சபையில் அகர முதலான 51 எண்ணுடைய தீபங்கள் திகழ்கின்றன. ஆநந்தசபையில் (கருவறை) பஞ்ச கலைகள் என்னும் சுடர் பிரகாசிக்கிறது. இவ்வாறு இத்திருக்கோயிலில் தத்துவம் அனைத்தும் தீப வடிவங்களாகவே வைத்துக் காட்டப்பட்டுள்ளன.

**தீர்த்தங்கள்**

திருப்பெருந்துறையில் பலதீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் ஆதியில் உண்டானவை ஒன்பது தீர்த்தங்கள். இவை நவதீர்த்தம் எனப்படும்.

1. **சிவதீர்த்தம்:** இது அம்பாள் சந்நிதிக்கு எதிரே கிணறு ரூபமாக இருக்கிறது. இதற்கு ஆத்மகூபம், ஆன்மநாதகூபம் என்றும் பெயர்கள் உண்டு. இதன் தீர்த்தம் ஆன்மநாதர்க்கு அபிடேகத்துக்குமட்டும் பயன்படுத்தப்படுகிறது.
2. **அக்கினி தீர்த்தம்:** இது ஆன்மநாதர் ஆலயத்தில் தென்மேற்கில் குளமாக இருக்கிறது. இதற்குச் சத்தி தீர்த்தம், திருத்தமாம் பொய்கை என்ற பெயர்கள் உண்டு. இதன் தீர்த்தத்தைக் கண்டாலும், தொட்டாலும்,பருகினாலும், நீராடினாலும் நினைத்த பயனை பெறலாம்.
3. **தேவதீர்த்தம்:** இது ஆன்மநாதர் ஆலயத்தின் எதிரே தெற்குத் திசையில் நெல்லியடி என்ற இடத்தில் பெரிய தடாகமாக விளங்குகிறது. இதற்கு நாததீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இத்தீர்த்தத்தில்நீராடுவோர் இம்மை இன்பமும் மறுமை போகமும் அனுபவித்து இறுதியில் சிவனடி சேர்ந்து பேரின்பம் எய்துவர். “தேவதீர்த்தக் கரையில் விநாயகர் பதினொரு கைகள், வல்லபை விநாயகரின் இடது தொடையில் சாய்ந்திருப்பது போல அமர்ந்துள்ளார்.சூலம், வேல், சக்கரம், மோதகம் போன்றவற்றைத் தன் பத்து கைகளிலும் ஏந்தியுள்ளார்.” - மேலது ப 7

4. **முனிவர் தீர்த்தம்:** இது திருக்கோயிலின் வடக்கு வீதிக்கு அருகில் ஓடையாக இருக்கிறது. இதற்கு விந்து தீர்த்தம், ரிஷி தீர்த்தம் என்ற பெயர்களும் உண்டு. இதில் நீராடினால் சகலபாதகங்களும் நீங்கும்.
5. **அசுர தீர்த்தம்:** இது திருக்கோயிலின் மேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு சதாசிவ தீர்த்தம், குளிர்ச்சிக்குளம் என்ற பெயர்கள் உண்டு. இதில் நீராடுவோர் பாவங்கள் நீங்கி வீடுபேறு அடைவார்கள்.
6. **வாயு தீர்த்தம்:** இது ஆன்மநாதர் ஆலயத்திற்கு வடமேற்குத் திசையில் இருக்கிறது. இதற்கு மகேச தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இத்தீர்த்தத்தில் நீராடினால் தீராத வியாதிகள் தீரும்.
7. **சிவகங்கை தீர்த்தம்:** இது ஆன்மநாதர் ஆலயத்திற்கு வடகிழக்கே உள்ள கயிலாசநாதர் திருக்கோயிலுக்கு வடக்கே உள்ளது. இதற்கு உருத்திரதீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் நீராடுவோர் கயிலாய பதவிபெறுவார்கள்.
8. **நாராயண தீர்த்தம்:** இது திருக்கோயில் வடக்கு வீதியில் பெருமாள் கோயிலுக்கு மேற்கே ஓடைரூபமாக இருக்கிறது. இதற்கு விஷ்ணு தீர்த்தம் என்ற பெயரும் உண்டு. இதில் மூழ்குபவர்கள் முப்பகையும் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்று வீடுபேறு அடைவார்கள்.
9. **பிரம தீர்த்தம்:** இது திருக்கோயிலுக்கு மேற்குத் திசையில் இருக்கிறது. இது முதன்மையப்பர் சந்நிதிக்குளம் என்று இப்போது சொல்லப்படுகிறது. இதில் மூழ்குகிறவர்கள் மகாபாதகங்கள் எல்லாம் நீங்கப் பெறுவர். மேலே சொல்லப்பட்ட நவந்தருபேதமான ஒன்பது தீர்த்தங்களேயன்றி மேலும் அறுபத்துநான்கு கோடி தீர்த்தம், வெள்ளாறு, திருத்தொட்டித் தீர்த்தம் முதலியனவும் திருப்பெருந்துறையில் உள்ளன.
10. **அறுபத்து நான்கு கோடித் தீர்த்தம்:** இறைவனின் திருவருளால் இத்தலத்தில் வெட்டின இடமெல்லாம் நீர் பெருகியது. இப்படி வெட்டி நீர்வரக்கண்ட குளங்களே அறுபத்து நான்கு கோடித் தீர்த்தமாகும். அவைகளில் ஒருசில தற்போது குறும்பனுடையான் தோப்புக் கிணறு, கட்டளை மடத்துத் தோப்புக் கிணறு, கணநாதர் கோயில்கிணறு, ராமகங்கை ஓடை என்ற பெயர்களில் பேசப்படுகின்றன.
11. **வெள்ளாறு:** இது ஆவுடையார்கோயிலுக்கு வடக்கே ஓடுகிறது. இதற்கு ஆனந்த வெள்ளாறு என்ற பெயரும் உண்டு.

மாணிக்கவாசகர் ஆவுடையார் கோவிலில் தங்கியிருந்தபோது, இறைவனுக்குப் பொற்சுண்ணம் (வாசனைப் பொடி) இடிப்பதாகப் பாவித்துப் பாடிய பாடல்கள் இவை.

வெள்ளாறு பற்றிய திருவாசகப் பாடல்:

**முத்தணி கொன்றையன் எம்பிரான் முந்நீர் முழங்கிட**
**அஞ்செழுத்து ஓதிவந்து பக்தியில் ஆர்க்கும் பழங்கடல் பொங்கி**
**பப்பறப் பாண்டி நன்னாட்டு மல்கி எத்திசை யும்சென்று**
**இழிந்துவெள் ளாறு இடைபுகுந்து எம்பெருமான் அடிசூடிக்**
**கத்திப் பெருகிக் கடல்தலைப் பாய்ந்து கலந்தது நம்உயிர்**
**கவ்விக்கொண்டே… (திருப்பரங்குன்றத் திருப்புகழ் பா. 7)**

சிவபெருமான் கொன்றை மலரை அணிந்தவன். அவனது அஞ்செழுத்து மந்திரத்தை (நமசிவாய) ஓதிக்கொண்டு, பக்தி என்னும் கடல் பெருகிப் பாண்டி நாடு முழுவதும் பரவுகிறது. அந்தப் பக்திப் பெருக்கானது 'வெள்ளாற்றில்' புகுந்து, எம்பெருமானின் திருவடிகளைத் தொட்டு வணங்கி, பிறகு கடலில் கலக்கிறது. அப்படிச் செல்லும்போது நம்முடைய உயிரையும் தன்னுள் இழுத்துக்கொண்டு இறைவனோடு கலக்கச் செய்கிறது. என்று வெள்ளாற்றின் பெருமை கூறப்படுகின்றது.

**ஆவுடையார்கோவில் - வெள்ளாறு சிறப்புகள்**

- **புண்ணிய நதி: திருப்பெருந்துறை என்று அழைக்கப்படும் ஆவுடையார்கோவில், வெள்ளாற்றின் கரையில் அமைந்துள்ளது. மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்றபோது, இந்த ஆற்றங்கரையில் இருந்த குருந்த மரத்தடியில்தான் சிவபெருமான் அவருக்குக் காட்சி தந்தார்.**
- **சிற்பக்கலை தொடர்பு: ஏற்கனவே நாம் பேசிய 'கொடுங்கைகள்' மற்றும் ஆவுடையார்கோவிலின் நுணுக்கமான சிற்பங்கள் அனைத்தும் இந்த வெள்ளாற்றின் கரையில் அமைந்துள்ள இக்கோயிலின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.**
- **குருந்த மரம்: இக்கோவிலில் இன்றும் தல விருட்சமாக இருப்பது குருந்த மரம். 'குருந்தம் மேவிய கோலமே' என்று மாணிக்கவாசகர் பல இடங்களில் இந்த ஆற்றங்கரை மரத்தைப் போற்றுகிறார்.**

12. **திருத்தொட்டித் தீர்த்தம்:** ஆன்மநாதருக்கும் யோகாம்பிகைக்கும் அபிடேகமான நீர் தேங்கி இருக்கிற தொட்டி திருத்தொட்டித் தீர்த்தமாகும். இந்த நீரை முகந்து நீராடுகிறவர்களின் உடல் நோய்கள் நீங்கி முக்திப்பேறு கிடைக்கும்.

**திருக்கோயில் பூசைமுறைகள்**

ஆவுடையார்கோயிலில் நாடொறும் உஷத்காலம், திரிகால சந்தி, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று ஆறு கால பூசைகள் நடைபெறுகின்றன.

**உஷத்கால பூசை:** நடுவாசல் காவல்காரர் விடியற்காலையில் நாலரை மணிக்கு மணியடிப்பார்கள். மணியோசை கேட்டு அனைவரும் எழுவர். பூசைமுறைகளில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன்படி, சுயம்பாகிகள் நிவேதனம் தயாரிப்பர். பரிசாரகர் சன்னதிகளைத் தூய்மை செய்வர். இடையர்கள் பஞ்சகவ்வியப் பொருள்களும் அபிஷேகப் பாலும் கொண்டு வருவர். நம்பிமார்கள் அனுட்டானம் முடித்து தேவசபைக்கு வந்து பஞ்சகவ்வியம் சேர்த்துப் புனிதமாக்கிய படப்பள்ளி முதலான இடங்களில் தெளிப்பர். பிறகு சிற்சபைக்கு வந்து கெண்டாபூசை, கலசபூசை, சங்கபூசை, துவார பூசைகளைச் செய்து ஆத்மநாதர் சன்னதியைத் திறப்பர். தீபம்போடுவர். அவ்விதமே அம்பாள் சந்நிதி குருந்த மூலம் ஆகிய இடங்களிலும் புண்ணியாகவசன ஜலம் தெளித்துத் தீபம் இடுவர். பிறகு சுவாமி சந்நிதியிலும் அம்மன் சந்நிதியிலும் அபிஷேகம் நடக்கும். புண்ணியாக வசனம் செய்து கெண்டா பூசை முதலியன செய்து அலங்காரம் நடைபெறும். பிறகு மாணிக்கவாசகர் சன்னதியில் சுவாமிக்கும் குருந்த மூலத்துக்கும் தீபாராதனை நடக்கும். பிறகு கதவு திறக்கப்படும். கணபதி முதலிய பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேக அலங்காரம் செய்து தீபாராதனை நடைபெறும். அதன்பிறகு அம்பாளுக்கும் மாணிக்கவாசகருக்கும் ஏககாலத்தில் தீபாராதனை நடக்கும். பிறகு மற்ற பரிவார மூர்த்திகளுக்கும் தீபாராதனை. இவ்வாறு பூசை நடக்கும்போது சுவாமி சன்னதியில் தீபாராதனையும் நடந்த பின்பு அஷ்டவர்கம் ஓதலும் வேதம் ஓதலும் தட்சிணாமூர்த்தி சகஸ்ர நாமார்ச்சனையும் சுத்தான்ன நிவேதனமும் திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகளின் நாம நட்சத்திரத்துடன் ஆசீர்வாதமும் நடக்கும். அதன்பிறகு ஓதுவாமூர்த்திகள் தேவார திருவாசகம் ஓதுவார். இவ்விதமே எல்லாச் சன்னதிகளிலும் தீபாராதனை நடக்கும். ஒவ்வொரு கால பூசையிலும் சுவாமியின் நிர்மால்யம் மாணிக்கவாசகர்க்குச் சாத்தப் பெறும்.

**திரிகாலசந்தி பூசை:** இது புதுக்கோட்டை மகாராஜாவின் கட்டளையின்கீழ் நடைபெறுவதாகும். நம்பிமார்கள் சுவாமி சன்னதிக்குப் புண்யாகவசனம் செய்தபிறகு குருந்த மூலத்துக்கு அபிஷேகமும் அஷ்டோத்தரமும் அம்பாளுக்கு அபிஷேகமும் லலிதா சகஸ்ர

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

நாமார்ச்சனையும் மகாராஜாவின் நாம நட்சத்திரத்துக்கு ஆசீர்வாதமும் நடக்கும். பிறகு மாணிக்கவாசகருக்குச் சகஸ்ரநாமார்ச்சனை நடக்கும்.

**காலசந்தி பூசை:** நம்பிமார் தேவசபையில் புண்ணியாகவசனம் செய்து சகல இடங்களிலும் தெளிப்பர். வைதீகர் சுவாமி சன்னதி குருந்த மூலம் அம்பாள் சன்னதிகளில் ருத்திர கலசத்தை ஆயத்தம் செய்து வைப்பர். நம்பிமார் அக்கலசங்களில் பூசை செய்து அபிஷேகம் செய்வர். குருந்த மூல அபிஷேகம் ஆன பிறகு செட்டியார் கட்டளைக்காகச் சகஸ்ரநாம அர்ச்சனை நடக்கும். பிறகுசுவாமி சன்னதி அம்பாள் சன்னதி முதலியவற்றிலும் அபிஷேக அலங்கார தீபாராதனைகள் நடைபெறும்.

**உச்சிக்கால பூசை:** இது சேதுபதி மகாராஜாவின் கட்டளையின் கீழ் நடைபெறுவதாகும். முன்சொன்னவாறே புண்ணியாகவசனம் முதலானவைகள் நடைபெறும். சேதுபதி மகாராஜாவின் நாமநட்சத்திரத்துடன் ஆசீர்வாதம் சொல்லப்படும். இக்காலத்தில் சிறப்பாக மாஷாபூபம் நிவேதனம் செய்யப்படும்.

**சாயங்கால பூசை:** நம்பிமார் முறைப்படி புண்ணியாகவசனம் செய்து சகல இடங்களிலும் தெளித்துக் கும்பபூசை செய்து சன்னதிகள் அபிஷேகம் நடைபெறும். குருந்த மூலத்துக்குத் தீபாராதனைஆனபிறகு தும்பைமாலை சாத்திப்பதினெட்டுநாமார்ச்சனை நடக்கும். அம்மனுக்கு லலிதா சகஸ்ரநாமார்ச்சனையும் பாயச நிவேதனமும் நடக்கும்; சாயங்கால பூசையில் பச்சையப்ப முதலியார் கட்டளையின்கீழ்ச் சுவாமிக்கு சகஸ்ரநாமார்ச்சனையும் குருந்த மூலத்துக்கு அஷ்டோத்தரமும், அம்பாளுக்குத் திரிசதியும் மாணிக்கவாசகருக்கு அஷ்டோத்தரமும் நடைபெறும்.

**அர்த்தசாம பூசை**: இது உடையாத்தேவர் கட்டளையின்கீழ் நடைபெற்று வருவதாகும். முதலில் கணேசருக்குக் கணேச சகஸ்ரநாமார்ச்சனை நடக்கும். பிறகு நம்பிமார் புண்ணியாகவசனம் வைத்து சகல இடங்களில் தெளித்து முறைப்படி அபிஷேகம் செய்வர். சுவாமிக்குச் சகஸ்ர நாமார்ச்சனையும் வர்க்கான்ன நிவேதனமும் நடக்கும். அம்பாளுக்குச் சகஸ்ரநாமாச்சனையும் முத்கான்ன நிவேதனமும் நடக்கும். தீபாராதனையுடன் பூசை முடிவுபெறும்.

**உற்சவங்கள்**

ஆனிமாதம், மார்கழி மாதம் ஆகிய காலங்களில் இரண்டு உத்ஸவங்கள் இத்தலத்தில் நடைபெறும். அவற்றுள் ஆனிமாத உத்ஸவம் மகத்தானது. மாணிக்கவாசகர் இத்தலத்தில் உபதேசம் பெற்றுச் சிறப்பெய்தியபடியால் அவர் இறைவனோடு ஒன்றிக் கலந்த ஆனிமகத்தை ஒட்டி உத்ஸவம் நடக்கும். உத்ஸவமும் அவருக்குத்தான் நடைபெறுகின்றது. சுவாமிக்கு உத்ஸவமில்லாதபடி மணிவாசகருக்கு நடப்பதால் இதனைப் பக்தோத்ஸவம் என்று நினைக்கலாகாது. மணிவாசகர் சிவமாகவே விளங்குவதால் இதனைப் பிரமோத்ஸவமாகவே கூறவேண்டும். திருவிழாக் காலத்தில் இடபம் திருத்தேர் முதலான வாகனங்களில் மணிவாசகர் திருவுலா வருகிறார்.

**முடிவுரை**

வியக்க வைக்கும் தமிழர்களின் கட்டிடக் கலையும், இறைவனே நேரில் வந்து ஞான உபதேசம் செய்து மாணிக்கவாசகரை ஆட்கொண்ட அற்புதங்கள் நிகழ்த்திய வரலாறும் கல்வெட்டு சான்றுகளோடு பார்க்க முடிகிறது. இத்தகைய சிறப்பு மிகுந்த தலத்தல வரலாற்றை அருள்மிகு ஆத்மநாத சுவாமி திருக்கோயில் 2001ஆம் ஆண்டு வெளியிட்டது. முடிவுரையாக பக்கம் 14ல் சொல்லப்பட்ட வாசகத்தில், “இத்திருக்கோயில் யோக, ஞான மார்க்கத்தாருக்கு உரியதாக இருப்பதால் இத்திருக்கோயிலின் உயர்சிற்பம் தெற்றென விளங்கும்” இங்கு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

குறிப்பிடப்பட்டுள்ள உயர்சிறப்பை சாமானிய சிவபக்தர்களும் ஓரளவு எளிதில் புரிந்து கொண்டு இறையருள் பெற வேண்டும் என்று அவாவின் அடிப்படையில் வரலாற்றின் அச்சுப்பணி நிறைவு பெற்றதாக எழுதப்பட்டுள்ளது. என்பதன் மூலம் இக்கோயில் சிற்பங்கள் மற்றும் அமைப்பின் வாயிலாகவே ஒரு மனிதனின் ஆன்மாவைக் கரையேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**குறிப்புகள்**

[1] அருணகிரிநாதர். *திருப்பரங்குன்றத் திருப்புகழ்*. விவேகபாநு அச்சியந்திர சாலை, 1914.
[2] *ஆவுடையார் கோவில் தல வரலாறு) திருப்பெருந்துறை*(. திருவாவடுதுறை ஆதீனம், 1964.
[3] குடவாயில் பாலசுப்பிரமணியன். *கல்வெட்டு சொல்லும் கோயில் கதைகள்*. சூரியன் பதிப்பகம், 2017.
[4] துரைசாமி ஐயங்கார், கி., பதிப்பாசிரியர். *மாணிக்கவாசகர் வரலாறு*. கே.விஜயம் கம்பெனி, 1919.
[5] தெய்வநாயகம், கோ. *தமிழர் கட்டிடக்கலை*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2002.
[6] *சென்னைடியன்*, https://chennaitian.blogspot.com/ 23 மார்ச் 2026 அன்று அணுகப்பட்டது.
[7] ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ."திருவாசக." *மாநாட்டு மலர்*, 1964, p. 2.
[8] "பயணக்கட்டுரை." travel.bhushavali.com, 2012, 23 மார்ச் 2026 அன்று அணுகப்பட்டது.
[9] முத்துசாமி, கோ. "திருச்சி மண்டல தொல்லியல் ஆய்வுத் துறை பதிவு." *தினமணி*, 16 பிப்ரவரி 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.